*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 496/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-5 (LW-5)***

*Name / Father's Name:* ***திருமதி.மீனா க/பெ. முத்தையா***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **12.08.2025.**

துவக்க நேரம் 04.26 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது உலிபுரத்தில் உள்ள அண்ணாநகரில் குடியிருந்து, கூலி வேலைக்கு சென்று வருகிறேன். கடந்த 26.01.2023 அன்று காலை 11.30 மணியளவில் எங்களது காட்டில், சுமதி என்பவர் டிராக்டர் மூலம் கிழங்கு ஏற்றிக்கொண்டு வந்துகொண்டிருந்தார்.

2) நாங்கள், எங்கள் காட்டில் டிராக்டர் ஓட்டக்கூடாது என்று சொல்லி டிராக்டரை நானும், எனது அப்பா ராமராஜ், எனது தம்பி பெருமாள், எனது கணவர் முத்தையா ஆகியோர் தடுத்தோம். அப்பொழுது எனது மச்சாண்டார் பெரியசாமி, எனது மாமனார் வெங்கட்ராமன், சுமதி, செல்வராணி ஆகியோர்கள் எங்களிடம் சண்டைக்கு வந்து எனது மச்சாண்டார் பெரியசாமி குச்சியால், எனது அப்பாவின் தலையில் அடித்துவிட்டார்.

3) எனது கணவரை, அவரது அப்பா வெங்கட்ராமன் கொடுவாள், குச்சி ஆகியவைகளை கையில் வைத்திருந்து அதில் எதால் எனது கணவரின் முன்பக்க நெற்றியில் அடித்தார் என்று தெரியவில்லை, ஆனால் அடித்துவிட்டார். எனது அப்பாவை கூப்பிட சென்ற எனது தம்பி பெருமாளை, பெரியசாமி என்பவர் குச்சியால் தலையில் ஓங்கி அடித்தார். மேலும் எதிரிகள் அனைவரும், எங்களை பார்த்து அசிங்க அசிங்கமாக பேசினார்கள்.

4) பின்பு நாங்கள் அங்கிருந்து வந்துவிட்டோம். எங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கு தம்மம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சென்று நாங்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டோம். அங்கிருந்து, மேல் சிசிக்சைக்காக ஆத்தூர், அரசு மருத்துவமனைக்கு எங்களை அனுப்பிவைத்தார்கள். இரண்டு நாட்கள் கழித்து போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்து, கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 04.32 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.08.12 16:59:22 +0530

Judicial Magistrate No.2, Attur.